# 1. பாஞ்சாலி சபதம்

- பாரதியார்

## பாரதியார்
### ஆசிரியர் குறிப்பு

இயற்பெயர் : சுப்பிரமணியன்

பெற்றோர் : சின்னசாமி ஐயர் - இலக்குமி அம்மாள்

மனைவி : செல்லம்மாள்

காலம் : 11.12.1882 முதல் 11.09.1921

பிறந்தஊர் : தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டயபுரம்.

படைப்புகள் : பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், ஞானரதம், அக்கினிக் குஞ்சு, ஆறில் ஒரு பங்கு, சுவர்ண குமாரி, பூலோக ரம்பை, திண்டிம சாஸ்திரி.

சிறப்புபெயர் : தேசிய கவிஞர், பாட்டுக்கொரு புலவன், சிறுகதை தந்தை, ஷெல்லிதாசன், விடுதலைக்கவி, மகாகவி, புதுக்கவிதையின் தந்தை, தமிழ்நாட்டின் கலில் ஜிப்ரான், விடிவெள்ளி, சிந்துக்குத் தந்தை, எட்டயப்புரத்துக்கவி.

பாடல்கள்
* வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு
* யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்.

**பணி** : உதவி ஆசிரியர் - சுதேசமித்திரன்
இதழ் ஆசிரியர் - இந்தியா, தர்மம்
ஆங்கில இதழ்கள் - பாலபாரத யங்இந்தியா

**குறிப்புகள்** : * சுதந்திரம் போராட்டத்தை பாரதப் போராகவும் பாரத மாதாவை பாஞ்சாலியாகவும் உருவகப்படுத்தி பாஞ்சாலி சபதம் இயற்றினார்.
* பாரதி எழுதிய பாடல் விவேகபானு எனும் இதழில் வெளியானது.

## பாஞ்சாலி சபதம் கதை

* அத்தினாபுரம் என்னும் ஓர் அழகான நகரம்.

* இவ்வுலகில் அந்த நகரம் மாறி எந்த இடத்திலும் இல்லை. என்று சொல்லும் அளவுக்கு அந்நகரம் பசுமையாகவும், தெருக்கள் வரிசையில் அழகாக அமைந்திருக்கும்.

* அந்நகரில் உயர்ந்த மாளிகைகள் உள்ளது. பார்ப்பனர் தெருக்கள் உள்ளது. அந்நகரில் தெருக்கள் வேதங்கள் மற்றும் கலைகள் ஒளிகளை கொண்டு சிறப்பாக இருக்கும் நகரம் ஆகும்.

* பாண்டவர்கள் அனைவரும் தலை நிமிர்த்தி இவ்வுலகில் வாழ்கின்ற நாள்வர்கள் ஆட்சி புரியும் ஓர் அரசு ஆகும்.

★ பாண்டவர்களின் வீரமும் பெருமையும். ஒரு
பொருளாகுமோ, வில்லினை உடைய காளை போன்ற
அர்ச்சுனன், கண்ணில் பெருமை உடைய
வீமனுடைய மார்பிலும் என்னை பற்றிய இகழ்ச்சி
மேலோங்குமே என்று துரியோதனன் பொறாமை
கொள்வதாக அமைந்துள்ளது.

★ பாண்டவர்களின் யாக வேள்விக்கு மற்ற
நாடுகளின் மன்னர்கள் பரிசு பொருளாக நலம்,
கருப்பூரம், நறுமணம் கொண்ட இலவங்கம், நல்ல
சாதிப்பாக்கு வகைகள் அழகு பொருள் கொண்டு
வந்து கொடுப்பார்கள்.

★ பொருள் கொடுத்தது மட்டும் இல்லாமல் தன்
கைகள் கட்டிக்கொண்டு இருப்பார்கள்.

★ துரியோதனன் அதனை கண்டு பொறாமை
கொண்டான்.

★ என் மாமன், சதி செய்பவர்களுக்கு சதி
செய்வார். பாண்டவர்கள் என் நண்பன்
ஜராசந்தனுக்கு வேள்வியின் போது எத்தனை
செயலை செய்தார்கள்

★ அச்செயலை என் மனம் மறக்குமோ? இந்த
உலக மக்கள் மறந்தாலும் நான் மறக்க மாட்டேன்
செல்வம் உடையவர்கள் மனிதர்கள் வணங்குவர்.
★ தீய வழியில் பொருள் ஈட்டினாலும்
இவ்வுலகில் அவர்களை வணங்கி
நாய்போல் அவர்களின் பாதங்களின் நக்குதலை பார்த்தாயா
என்று துரியோதனன் பாண்டவர் பற்றி கூறினார்
மாமனை

★ கௌரவர்களுடைய இருக்கைகள் அனைத்தும்
திசைகள் தொங்க அமர்ந்தார்கள், தங்களுடைய
இருதோள்களும் கொட்டி கொண்டு இருந்தார்கள்.

★ தருமனுக்கு இது தரும் என்று கூறி ஓர்
என உரக்க கூறினார். கக்க என காத்து
சரியாகத்தனை கட்டி தழுவி கொள்க என கூறுகிறார்.

★ சகுனி பாஞ்சாலியை சூதில் பிணையப்
பொருளாக வைத்து இழந்துவிட்டார். தர்மரை பார்த்து
வீமன் சூதாடுபவர்களின் இல்லங்களில் பெண்கள்
உள்ளார்கள். சூதில் அடிமை பெண்கள்
செல்வதில்லை. எதற்காக துருபதன் மகள்
பணயமாக திரௌபதியை வைத்தாய் என்று
கேட்கிறார்.

★ அறவாழ்வை சூது பறிக்கும் அறம் மீண்டும்
வெல்லும் என்னும் இயற்கையில் மறைந்துள்ள
உண்மையை நம்மை கண்டு உலகத்தில் கற்பார்.

★ இந்நெறியை ஆராய்ந்து விதி என்பவன்
இந்த செயலை புரிந்தான் என்று அர்ச்சுனன்
கூறுகிறார்.

★ பாஞ்சாலியை சூதாட்டத்தில் வைத்து.
இழந்தீர்கள் நாட்டை இழந்தீர் பொறுத்து கொண்டோம்.
ஆனால் மகளை வைத்து இழந்ததை பொறுத்துக்
கொள்ள முடியாது. தம்பி எரியும் கொள்ளிக்
கட்டையை கொண்டு வா. ஒளிக்கதிராகிய
திரௌபதியை இழந்த அண்ணன் கையை

தீட்டெரிப்போம் என்று வீமன் கூறுகிறார்.

★ பெண்ணின் கூந்தலை பற்றி கொண்டு சூதாடும் இடத்திற்கு வருகிறான். அந்த காட்சியை பார்த்த அனைவரும் இது என்ன கொடுமை என்று புலம்பினர்.

★ பெட்டை அடிமை மற்றவர்களுக்கு உதவியாகுமோ? என்று பாரதியார் கேட்கிறார்.

★ பாஞ்சாலி சூதாட்டத்தில் நீதிகேட்டு அழுகிறாள். "கணவரே இது ஊழ்வினையோ? அம்மியை மிதித்து அருந்ததி நட்சத்திரத்தை காட்டி சுடும் வேள்வி தீ முன்னர் என்னை விரும்பி மணந்து கொண்டார்.

★ பெரும்பாவம் உடையவர்கள் முன்பு இந்நாளில் பெருமை அழிவதனைப் பார்ப்பீரோ? என்ற புலம்பும் காட்சி ஆகும்.

---

## 2. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

-பாவேந்தர் பாரதிதாசன்.

**ஆசிரியர் குறிப்பு** :-

**பிறப்பு** : 29/04/1891

**ஊர்** : புதுவை

**பெற்றோர்** : கனகசபை, இலக்குமி அம்மையார்

**இயற்பெயர்** : சுப்புரத்தினம்

**சிறப்புபெயர்** : புரட்சிக்கவி

**மறைவு** : 21/04/1964.

=> பாரதியார் மீது கொண்ட பற்றால் சுப்புரத்தினதாசன் என தனது பெயரை மாற்றிக் கொண்டார்.

=> இவர் கவிதைகளில் இனிய இசைநயம் உண்டு, கருத்துக்களில் உணர்ச்சி புயல் வீசும்.

=> தமிழ்ப்பற்று, சமுதாயச் சீர்திருத்தம், பகுத்தறிவு, பொதுவுடைமை, அழகுணர்ச்சி, நாட்டுப்பற்று போன்றவை இவரது பாடலில் இருக்கும்.

=> பிரெஞ்சுமொழி தமிழ்மொழியில் நிறைந்த புலமை உடையவர்கள்.

குயில் என்னும் இதழை நடத்தியவர்.

<u>இவரது படைப்புகள்</u>:

=> பாண்டியன் பரிசு
=> எதிர்பாராத முத்தம்
=> சேர தாண்டவம்
=> அழகின் சிரிப்பு
=> குடும்ப விளக்கு
=> இருண்ட வீடு
=> கண்ணகி புரட்சிக்காப்பியம்
=> வீரத்தாய்
=> புரட்சிக்கவி.

"தமிழுக்கு அமுதென்றுபேர் - இந்தத்
தமிழ் இன்ப தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
என்று தமிழின் பெருமையை உணர்த்தியவர்.

⇒ வஞ்சியானவள் குப்பனிடம் பச்சிலைப்
பறித்துத்தர வேண்டும்போது, அவன் மறுக்க,
வஞ்சி வற்புறுத்த பெண்ணுக்கு இது தருமமா? என்று
கேட்டவிடத்து பெண்ணுக்கு இந்த தேசத்தில்
அடிமைத்தனம் ஒழிந்தால்தான் இந்த பாரததேசம்
விடுதலை அடையும். இல்லையெனில் விடுதலை
அடைவது முயலுக்கு கொம்பு முளைத்தல் போன்றது.
என்று கூறும் வரிகள் ஆகும்.

⇒ குப்பனுக்கு வஞ்சியும் தனித்து இருக்கும்
சமயத்தில் குப்பன் தாய் திருநாட்டில் என்ன
நடக்கிறது என்று செவி கொடுத்து கேட்கவே,
சக்தி மலையை அனுமன் பெயர்க்கப்போவதை
கண்டு அச்சம் கொண்டான்.

⇒ இராமன் அருள் பெற்ற அனுமன் பெரும
உடல் கொண்ட இராமபக்தன் 'அனுமனுக்கு'
வலிமையற்றவன் வாதைகளாக சுமைய 'சொற்பொழிவாளர்
கூறும் பகுதியாகும்.

⇒ நம் தேசத்தில் பொய்யான புராணங்கள்,
இதிகாசங்கள். உள்ளவரை நம்மிடையே
இருக்கும் மூடப்பழக்கங்களும் அறியாமை
செயல்களும் ஒழிந்து போகாது.

## மந்திரக் குளிகையின் குணம்:

⇒ ஒன்று வாயில் இட்டால் இவ்வுலக மக்கள் பேசுவதைக் கேட்கும், மற்றொன்று தின்றால் மண்ணுலகக் காட்சி அனைத்தும் இருந்த இடத்தில் இருந்தே தெரியும் தன்மை கொண்டது

---

## அலகு - 2

### 3. உமர்கய்யாம் பாடல்கள்

கவிமணி சு.து.சு யோகியார்

**கவிமணி குறிப்பு**

பிறப்பு : 1876

பெயர் : தேசிக விநாயகம் பிள்ளை

ஊர் : நாஞ்சில் நாடு, தேரூர்

பெற்றோர் : சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி அம்மையார்

புனைப்பெயர் : தேவி

பட்டப்பெயர் : கவிமணி- தமிழறிஞர் உமாமகேஸ்வரனார் வழங்கினார்.

இறப்பு : 1954

**படைப்புகள்:**

- ★ மலரும் மாலையும்
- ★ ஆசிய ஜோதி.
- ★ இளந்தென்றல்
- ★ குழந்தைச் செல்வம்
- ★ உமர்கய்யாம் பாடல்கள்

ச.து.சு யோகியார் குறிப்பு:..

பிறப்பு : 30.11.1904

பெற்றோர்: துரைசாமி – மீனாட்சி அம்மாள்

இயற்பெயர்: சுப்பிரமணியம்

பட்டப்பெயர்: பாலபாரதி

படைப்புகள்: 1. தேசபக்தி கீதம் – முதல் நூல்
2. காளிதாசன் – கவிதைகள்

பத்திரிகைப்பணி:

1. 1. புதுமை, 2. கிராமம், 3. குமார்விகடன், 4. சுதந்திரச்சங்கு போன்ற பத்திரிக்கைகளில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

2. 1936-ல் திரைப்படத்துறையில் கால்பதித்தார்.

மறைவு: 27.07.1963

3. உமர்கய்யாம் பாடல்களை தமிழில் மொழிபெயர்த்தவர்கள் கவிமணி, ச.து.சு. யோகியார் ஆவார்.

4. உமர்கய்யாம் குறிப்பு:

நாடு: பாரசீகம், நகரம்: நிஷபூர்

இயற்பெயர்: கியாசுதீன் அபுல்பாத் உமார்

கய்யாம்: கூடாரம் செய்பவன் என்ற பொருள்.

இவருடைய கவிதைக்கு ருபாயத் என்ற பெயர். ருபாயத் என்றால் 'நாலடிப்பாடல்' என்ற பெயர்.

⇒ இன்றைய தினமே முடித்திட வேண்டும் என்கிற ஆர்வத்துடன் இரவும் பகலும் உழைக்க வேண்டும். அப்படி இல்லாமல் நாளைக்கு உழைத்துக் கொள்ளலாம் என்ற சோம்பலுடன் தள்ளி வைத்திடாமல் உழைத்திட வேண்டும்.

⇒ மனித வாழ்வில் இறப்பு, பிறப்பு என்பதையும் இன்பம், துன்பம் கலந்தது தான் நம்முடைய வாழ்க்கை நிலை என்பதையும் மலர்கள் உதிர் இன்றி நிலையொடு ஒப்பிடுகிறார்.

⇒ அழகும் இளமையும் கலந்த தோற்றம் ஒரு நாள் அழிந்து விடும் என்பதனை ஞானிகள் உணர்ந்துள்ளனர்.

⇒ மலர்ந்த மலர்கள் வாடுவது எப்படி இயற்கையாக நிகழுமோ அது போல வாழ்வு நிலையில்லாதது. ஒருநாள் அழியும் இயல்புடையது.

⇒ இளமையும் செல்வமும் நிலையற்றது. என்பதனை உணர்த்தியுள்ளார் ஔவையார் அவர்கள்

⇒ இன்பமாக இருந்தாலும் துன்பமாக இருந்தாலும் எதுவாக இருந்தாலும் செய்ய இருப்பதை இன்றே செய்து முடித்திட வேண்டும். நாளை என்பது உண்மையானதா? நிலையானதா? என்பதை அறிய முடியாது.

⇒ உலக வாழ்வு நிலையில்லாதது என்று கூறி நிலையாமை கருத்துக்களை எடுத்துரைக்கிறது.

# 4. ஒரு கிராமத்து நதி

- சிற்பி

## ஆசிரியர் குறிப்பு:-

**ஊர்** : கோவை மாவட்டம் ஆத்துப்பொள்ளாச்சி

**பிறப்பு** : 29.07.1936

**பெற்றோர்** : பொன்னுசாமி, கண்டியம்மாள்

**இயற்பெயர்** : பாலசுப்பிரமணியம். பொ.

**புனைப்பெயர்**: சிற்பி.

**படைப்புகள்**: 1. நிலவுப்பூ 2. சிரித்த முத்துக்கள்
3. ஒளிப்பறவை 4. சர்ப்பயாகம்.
5. புன்னகை பூக்கும் பூனைகள்,
6. மௌன மயக்கங்கள் 7. சூரிய நிழல்
8. ஒரு கிராமத்து நதி 9. பூஜ்ஜியங்களின் சங்கிலி.

⇒ மாப்பிள்ளைக் கவுண்டர் அனைத்து வயது முதிர்ந்தவர். சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோரும் அவரை மாப்பிள்ளைக் கவுண்டர் என்று அழைப்பார்கள்.

⇒ அவர் கதை சொல்லத் தொடங்கினால் அனைவரும் ஐம்புலன்களையும் அடக்கி கதை கேட்கத் தொடங்குவர். அவர் பேச்சில் குறும்பு கலந்து இருக்கும் என்பதை குறிப்பிடும் வரிகள் ஆகும்.

⇒ கவிதை நதியானது, என்னிலிருந்து, நான் அன்றி ரசித்து படைப்பதால், என்னையே கரைத்துக் கொண்டு என் மனத்திலிருந்து வருகிறது. அது

என்னையே நீந்தச்செய்கிறது இந்த கவிதை நதி என்று குறிப்பிடுகிறார்.

=> இந்த நதியில் உப்பாறு, பாலாறு இரண்டும் கலக்கும். இரத்த நதி எனக்கு தாய்ப்பால் போன்றது.

=> கரையில் படிக்காத பல இதிகாசங்களும், எழுதி முடிக்காத பல சரித்திரங்களும் உண்டு என்கிறார்.

=> பாறைகளை சிற்பமாக்கும் உளிக்கும் நதியின் அலைகளுக்கு உண்டு. இந்த நதி பகலில் ஓவியமாய், இரவில் நாதசுர இசையாய் காட்சிதரும் சிறப்பு வாய்ந்தது.

=> சிறிய வயதில் கோரைப்பாய் செய்வதற்கும் தான் தனிமையில் இருக்கும்போது ஆறுதல் இடமாகவும் இருந்ததை சிற்பி குறிப்பிடுகிறார்.

=> தெற்கு வளவுப் பாட்டையா தங்க நிற மேனியராகவும் வளைந்த மீசை உடையவராகவும், கூன் முதுகையும், நரைத்த முடியுடனும் காட்சியளிக்கிறார்.

=> தெற்குவளவுப் பாட்டையா என்பவர் உழவராவார். படிக்காதவர். ஆனால் வில்லிபாரதத்தையும், கம்பராமாயணத்தையும் நா பிறழாமல் பாடுபவர் என்றும் தெற்கு வளவுப் பாட்டையாப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

⇒ தாமிர முகம், கொங்கிக்கொண்டை, கறைபடிந்த பல், சிவப்பு மேனி, கைத்தறி சேலை என்ற தோற்றமளிக்கும் அம்மாவின் நேசிப்பை எடுத்துரைக்கிறார்.

---

## அலகு - 3: உரைநடை

### 1. உதிர்ந்த மலர்கள் - டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர்.

**ஆசிரியர் குறிப்பு.**

பிறப்பு : 19.02.1855

ஊர் : உத்தமதானபுரம்

மாவட்டம் : தஞ்சை

பெற்றோர் : வேங்கடசுப்பையர், சரஸ்வதி அம்மையார்

மறைவு : 28.04.1942

⇒ பத்துப்பாட்டை முதன்முதலில் பதிப்பித்தவர் டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர், 1889.

⇒ பத்துப்பாட்டின் பிரதி ஏட்டை தருமபுர ஆதீனமடத்தில் கண்டெடுத்தார்.

⇒ தருமபுரமடம், திருவாடுதுறை மடம் ஆகியவை கீழைவீடு, மேலைவீடு என்று அழைப்பர்

⇒ உ.வே.சா பணிபுரிந்த ஊர் கும்பகோணம் (அ) குடந்தை.

## மிளகு காப்பு:

★ சுவையுடையவர்கள் எண்ணெய் தேய்த்துக் கொள்வது வழக்கமில்லை. மிளகு முதலிய சிறுபொருட்களைப் பால்விட்டு அரைத்து தேய்த்துக் கொள்வார்கள். அதற்குத்தான் மிளகு காப்பு என்று பெயர்.

## களவொழுக்கம்:

⇒ மனைநிலத்தில் வாழும் ஒரு தலைவியை அவளுடைய தாய் "தினைக் கொல்லையைக் காத்து வருவாயாக" என்று கூறித் தோழியுடன் அனுப்புகிறாள். தலைவியும், தோழியும் தினைக் கொல்லைக்குச் சென்று பரண்மேலிருந்து கிளி முதலியவற்றை விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

⇒ அருவியில் விளையாடி மகிழ்வதும், பட்டுக்களைப் பாடியும், பலவகையான அழகிய மலர்களைப் பறித்துப் பாறையிலே குவித்தும், இருந்தன.

⇒ சூரியன் அத்தகிரியில் மறைகிறான். மான் இனங்கள் மரத்தடியில் கூடுகின்றன. பசுக்கூட்டங்கள் வயிறார மேய்ந்துவிட்டுத் தம்முடைய கன்றுகளை நினைத்து விரைந்துகொண்டே மந்தைகளில் புகுகின்றன.

⇒ இடையர்கள் எல்லாம் தங்களுடைய புல்லாங்குழலில் ஆம்பல் பண்ணை வாசிக்கின்றனர். ஆம்பல் அரும்புகள் இதழ் விரிகின்றன.

⇒ காட்டிலே கல்லென்ற ஒலி உண்டாகின்றது புள்ளினங்கள் தத்தம் கூடுகளில் வந்து ஒலிக்கின்றன. இப்படி மாலை வந்தது என்று உ.வே.சா. குறிஞ்சிப்பாட்டிலுள்ள வினைகளையும் பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகளையும் குறிப்பிடுகின்றார்.

⇒ பத்துப்பாட்டை பதிப்பிக்கும்போது உ.வே.சா விற்கு மூலப்பிரதி கிடைக்காத காரணத்தால் உரையில் இருந்த மூலத்தையே 1889-ஆம் ஆண்டு வெளியிட்டார்

⇒ தமிழ் நூல்களையும், தமிழ்புலவர்களையும் பாதுகாக்கும் சைவ மடங்களான தருமபுர ஆதீனமடம், திருவாவடுதுறை ஆதினமடம் என்னும் இரண்டு மடங்களில் தருமபுர ஆதீனமடத்தில் தேடாது விட்டதை எண்ணினார்.

⇒ உ.வே.சா. தான் தேடிய ஏடு கிடைத்தவுடன் இழந்த குழந்தையை கண்டு கிடைத்தால் உண்டாகும் மகிழ்ச்சியைப் போல மகிழ்ந்தார். அவர் தேடிய வரிகள்.

"தேமா தேமாம்பூ மணிச்சிகை செம்மணிப்பூ வரிது
நாறு அவிழ் கொத்து உந்தாழ் தனக்கு உரித்தாக நாளும்
விரிந்த கொத்தினையுடைய பெருமூங்கிற்பூ".

என்னும் வரிகள் ஆகும்.

⇒ உ.வே.சா.வின் முயற்சியால்தான் இன்று பழந்தமிழ் நூல்கள் பல நமக்கு கிடைத்ததோடு மட்டும் அல்லாமல் தமிழரின் வரலாற்றுச் செல்வங்களாக அவை திகழ்கிறது.

## 2. தமிழ்த்தாய்

-மறைமலையடிகள்

### ஆசிரியர் குறிப்பு

பிறப்பு : 15.07.1876

பெற்றோர் : சொக்கநாதபிள்ளை, சின்னம்மா அம்மையார்

ஊர் : நாகப்பட்டினத்தை அடுத்த காடம்பாடி

கல்வி : 9-ஆம் வகுப்பு.

படைப்பு : நாடக நாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள் போன்ற பதினம் படைத்துள்ளார்.

மறைவு : 15.09.1950

⇒ இருநூற்று மூன்று நூறாயிரத்துத் தொண்ணூற்றையாயிரம், 239500 மக்கள் தமிழ்மொழி பேசுவர்.

⇒ தமிழுக்கு நிகரான பழமை வாய்ந்த வழக்கு இழந்த மொழிகள் ஆரியம், கிரேக்கம், இலத்தீன், எபிரு, அராபி, சீனம்,

⇒ தமிழ் மெய்ந்நூல்கள் சிவஞானபோதம், சிவஞானசித்தி ஆகியவையாகும்.

## தமிழ்மொழியின் சிறப்பு:

⇒ தமிழராகிய நாம் நாள்தோறும் பேசிவரும் தாய்மொழி தமிழேயாகும்.

⇒ நாம் பிறந்தது முதல் இறப்பு வரை பேசும் மொழி தமிழ்தான். நமது உயிரோடும் உயிரோடும் உடலோடும் கலந்து நமது அறிவை வளர்ப்பது தமிழ்மொழியாகும்.

⇒ தமிழ் மக்கள் எல்லாரும் அறிவிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்க வேண்டுமானால் அவர்கள் தமக்கு தெரிந்த தமிழ்மொழி வழியாகவே பேசுதல் எழுதுதல் வேண்டும் என்கிறார்.

## மறைமலையடிகளின் மொழிப்பற்று:

⇒ தமிழராய் பிறந்த ஒவ்வொருவரும் தன் வாழ்நாளில் நம் தாய்மொழியான தமிழ் அன்னையைப் போற்றி அம்மொழியையே நாம் பயன்படுத்தி வந்தால் நமக்கு நன்மை உண்டாகும்.

⇒ அதை விடுத்து பிறமொழிப் பற்றைக் கொண்டால் தீமையே உண்டாகும் என்பதை தமிழ்த்தாய் என்னும் தலைப்பில் உயர்ந்துரை வைத்துள்ளார் மறைமலையடிகள்.

⇒ பிறமொழியாளர் தன் மொழியை நன்கு கற்ற பின்னரே பிறமொழியைக் கற்றுக் கொள்கின்றனர்.

⇒ நம் தாய்மொழி இன்ன காலத்தில் தோன்றியது என்று எவராலும் கூற முடியாத அளவிற்கு பழமைவாய்ந்த மொழி.

⇒ மொழியின் அமைப்பையும், மக்களின் வாழ்வியல் மற்றும் உலக வழக்கு போன்றவற்றை எடுத்துக்கூறுவது நமது தமிழ் மொழியில் அமைந்த தொல்காப்பியமே ஆகும்.

⇒ நம் தமிழ்த்தாயை மறவாது பாதுகாக்கும் பெரும்பேற்றை நம் தமிழ் மக்கள் கைக்கொண்டால் அவர்களின் வாழ்வு சிறக்கும். இது உண்மை என்று மறைமலை அடிகள் குறிப்பிடுகிறார்.

---

## 3. முருகன் தொன்மை

– திரு. வி. கல்யாணசுந்தரனார்.

**ஆசிரியர் குறிப்பு:**

**பிறப்பு**: 26.08.1883

**ஊர்** : திருவாரூர்

**பெற்றோர்**: விருத்தாசலமுதலியார், சின்னம்மாள்

படைப்பு : உரிமை வேட்கை, முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல், புதுமை வேட்டல், பொதுமை வேட்டல், சிவன் அருள் வேட்டல், கிறிஸ்துவின் அருள் வேட்டல்.

மறைவு : 17.09.1953

⇒ தமிழ் பெரியோர்கள் முருகனை அழைத்த விதம் என்னவென்றால் தமிழன், முத்தமிழோன், தமிழ்ப்பெருமான், தமிழ் இறை, குறிஞ்சி கிழான், மலைகிழவோன் என்பனவாகும்.

⇒ முருகு என்பதற்கு அழகு என்பது பொருளாகும்.

⇒ முருகு என்பது மிகத் தொன்மை வாய்ந்த சொல். அது ஒரு தமிழ் சொல்.

⇒ முரு என்னும் முதல் நிலை 'அன்' என்னும் ஆண்பால் இறுதி ஏற்று முருகன் ஆயிற்று.

⇒ தொல்காப்பியர் காலம் இன்னதென்று அறுதியிட்டு எவராலும் கூறமுடியாது. அதுபோல முருகு என்னும் சொல்லும் ஆகும்.

⇒ தொல்காப்பியர் காலத்தில் முருகன் வழிபாடு இருந்தது என்பதற்கு தொல்காப்பியத்தில் அகச்சான்றுகளும், புறச்சான்றுகளும் உண்டு.

**முருகன் தொன்மை :**

⇒ முருகு என்னும் சொல் எத்தன்மை வாய்ந்தது என்றும், அச்சொல் எந்நாளில் உண்டாயிற்று என்றும், தொன்மையான சொல்

முருகு என்பதும் என்பதும், அதனை பண்டைய மக்கள் எவ்வாறு வழங்கி வந்தனர்.

⇒ முருகு என்பது மிகத்தொன்மை வாய்ந்த தமிழ் சொற்கள் பண்டைய நாளில் முருகு என்னும் சொல் 'அன்' இறுதியைப் பெற்று முருகன் என வழங்கினர்.

சான்று: ⇒ முருகன் தமிழ்க்கடவுள். முருகன் மலைநிலக் கடவுள் என்னும் தமிழ் இலக்கியச் சான்றால் முருகனின் தொன்மை புலப்படுகிறது.

⇒ உலகில் தோன்றிய முதல் மனிதன் தமிழன் என்றும் அவன் வாழ்ந்த பகுதி தமிழகம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

⇒ நமக்கு கிடைக்கும் பழமையான நூல்களில் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியகாலம் பற்றிய ஆராய்ச்சியில் இன்ன காலம் என்று அறுதியிட்டு கூறமுடியவில்லை.

⇒ முருகு என்னும் சொல், மக்கள் இனம் தோன்றியபொழுதே தோன்றியிருக்கலாம்.

⇒ திரு.வி.க. மக்கள் நல்வாழ்வு வாழும் காலத்தில் இயற்கையாய் தோன்றும் அழகு, இளமை, மணம், கடவுள்தன்மை போன்ற இயல்புகளை முருகு என்னும் சொல்லால் பண்டைய தமிழர் வழங்கி வந்தனர் என்று குறிப்பிடுகிறார்.

# 4. கருவி வளர்ச்சி

-வா.செ.குழந்தைசாமி

ஆசிரியர் குறிப்பு:

ஊர்: திருச்சி மாவட்டம் – வாங்கலாம்பாளையம்

இயற்பெயர்: குலோத்துங்கன்.

பணி: ⇒ நீர்வளத்துறைப் பேராசிரியர்.

⇒ தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநர்.

⇒ மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர்.

⇒ இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்.

⇒ அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர்.

⇒ யுனெஸ்கோ ஆலோசனை உறுப்பினர்.

⇒ செம்மொழி மையத்தின் ஆலோசனை உறுப்பினர்.

படைப்பு:

⇒ வாழும் வள்ளும் – சாகித்திய அகாதெமி விருது.

⇒ அறிவியல் தமிழ் – உரைநடை

⇒ குலோத்துங்கன் கவிதைகள்.

⇒ கருவிகளைப் படைக்கும் ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டு என்று ஆல்ஃப்ரெட் வாலஸ் கூறினார்.

⇒ மனிதனின் உழைப்பினால் உருவாக்கப்பட்ட கலைப் படைப்புகள் ஏகப்பட்டிருப்பினும், தஞ்சைப் பெரியகோயில்.

**கணினியின் செயல்பாட்டு வேகம்:**

⇒ 1950-ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்டது கணினி. அது வடிவிலும், திறனிலும், விலையிலும், வேகத்திலும் கற்பனையையும் கடந்த வளர்ச்சியை பெற்று வருகிறது.

⇒ மனிதனின் வேகத்தைவிடப் பன்மடங்கு வேகமாகச் செயலாற்றும் ஆற்றல் வாய்ந்தது கணினி.

⇒ நமக்குத் தேவையான நூல்களை சில நொடிகளில் தேடி எடுத்துக்கொள்ள கணினியின் செயல்திறன் காரணமாகச் செயல்படுகிறது. கணிப்பொறி மனித மூளையினைவிட விரைவுடையது.

**கணினியின் செயல்பாட்டு வேகம்:**

1. Processor Speed
   செயற்பாடுகள் : 3000 கோடி கூட்டல்கள்
2. RAM : 4 to 16 GB
   Main Memory - $16\times10^9$ bytes
   1600 கோடி எழுத்துக்கள்,
   400 கோடி சொற்கள்.
3. 3½ Floppy - 250 MB - $250\times10^6$ bytes
   Zip drive. 20 கோடி எழுத்துக்கள்,
   6 கோடி சொற்கள்

4. CD-ROM storage - ~~700~~ MB - $700 \times 10^6$ bytes
70 கோடி எழுத்துக்கள்,
18 கோடி சொற்கள்.

5. DVD storage - 4.7 GB - $4.7 \times 10^9$ bytes
470 கோடி எழுத்துக்கள்,
120 கோடி சொற்கள்,
4 கோடி புகைப்படங்கள்

6. Line printer - 2000 Lines/min

7. Laser Printer - 40 pages/min.

போன்ற செயல்திறன் வேகம் கொண்டதாக கணினியும், தொழில் நுட்பக் கருவிகளும் உள்ளன.

**கருவி வளர்ச்சி:**

⇒ மனிதன் விலங்குகளை விரட்டி வேட்டையாடி, காய், கனிகளை உண்டு காடுகளில் வாழ்ந்த காலத்தில் இருந்து இன்று வரை சமுதாயத்தின் வளர்ச்சியை ஆராய்ந்தால் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அவன் உருவாக்கிய புதுக்கருவிகள் அனைத்தும் துணை நின்று இருப்பதைக் காணமுடிகிறது.

**வேளாண்மை யுகம்:**

⇒ ஏறத்தாழ 8000 ஆண்டுகளுக்கு முன்னால் ஊர் பெயர் தெரியாத ஒரு மேதை கலப்பையைக் கண்டுபிடித்தான்.

⇒ அதன் அடிப்படையில் உருவானதுதான் வேளாண்மை நாகரிகம். கலப்பையைக் கண்டுபிடிக்கும் வரை அன்றாட உணவை தேடி அலைந்து கிடைத்ததை உண்டு வாழ்கின்றான்.

தொழில் யுகம் :

⇒ வேளாண்மை நாகரிகத்தில் மனிதன் நீர், நிலம் ஆகிய இரு வளங்களை மட்டுமே பயன்படுத்த அமைந்தது.

⇒ விலங்குகளின் வலிமையைப் பயன்படுத்தி நீரை இறைத்தான். சாணம், கூழும், கவிஞர் பாடும் காவியப் பொருள் அனைத்தும் கனவாகவே இருந்தது.

கல்வி யுகம் (அ) தொழில் நுட்ப யுகம் :

⇒ மனிதனின் கட்டளை ஏற்ற வல்திறனை அதிகப்படுத்தியது தொழில் யுகம். தகவல் நாபகம், மூளையின் செயல்திறன், வேகம் இதனை அடிப்படையாகக் கொண்டு மனிதனுக்கு ஒப்பாக உருவானது தான் கணிப்பொறி.

⇒ இது 1950 களில் உருவானது.

⇒ இவ்வளர்ச்சி அதன் மொழி வளர்ச்சியோடு ஒன்றாகிறது. மனித சமுதாயத்தின் மென்மையான கருவி மொழியேயாகும். அதனைப் பாதுகாப்போம்.

## 5. கடலோண்ட காவலர்

- ரா.பி. சேதுப்பிள்ளை

**பிறப்பு** : 02.03.18

**ஊர்** : திருநெல்வேலியில் உள்ள ராசவல்லிபுரம்

**பெற்றோர்** : பிறவிப்பெருமாள்பிள்ளை, சொர்ணத்தம்மாள்

சிறப்புப்பெயர் : சொல்லின் செல்வர்

படைப்பு : ஊரும் பேரும், திருவள்ளுவர் நூல் நயம், தமிழ்விருந்து, வாழ்க்கையும். வைராக்கியமும், தமிழின்பம்.

மறைவு : ஏப்ரல் 1961

⇒ கடல் பிறக்கோட்டிய மன்னன் என்று புகழப்படுபவர் சேரன் செங்குட்டுவன்.

⇒ ஆகாய விமானத்தை தமிழ் இலக்கியம் வானஊர்தி என்று அழைத்தது. அதனை இயக்குபவனின் பெயர் வலவன் ஆகும்.

⇒ தமிழகத்தைச் சேர்ந்த குணகடல், குடகடல் ஆகிய இரு கடல்களையும் பெற்ற இராஜராஜன் இலங்கையின்மீது படையெடுத்தான்.

⇒ இலங்கைத் தீவகத்தின் தலைநகராகிய அநுராதபுரத்தில் இருந்து ஆட்சி புரிந்தான்.

⇒ மலைவளம் சுரக்கும் மலாய் நாட்டில் தமிழர் வாழ்ந்த இடங்களை அவற்றின் பெயர்களே சுட்டுகின்றன.

⇒ 'காழகம்' என்னும் பகுதியில் விளைந்த பொருட்கள் கடல் வழியாக காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்தது என பட்டினப்பாலை சுட்டுகிறது.

⇒ சேரலாதனும், செங்குட்டுவனும் தமிழ்நாட்டு வாணிக வளத்தைப் பாதுகாக்கக் கருதிய கடல் போர் புரிந்துள்ளனர். அவர் காலத்தில் கடல் வழியாக நிகழ்ந்த

வர்த்தகத்தால் சேரநாடு வளமுற்று இருந்தது.

⇒ சோழநாட்டுக் கப்பல் படையும் மிகவும் பழமை வாய்ந்தது. கரிகால் வளவன் காலத்திற்கு முன்னே காவிரி நாட்டையாண்ட சோழன் கடல் ஆட்சி புரிந்தான் என்பதை,

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன்"

என்னும் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

⇒ ஆகாயத்தில் பறந்து செல்லும் கோட்டை போன்ற பெரிய விமானமும் அந்நாளில் இருந்ததை சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

"தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்"

என்று சோழமன்னனைப் புகழ்வதைக் காணும்போது ஆகாய விமானம் இருந்ததை அறியலாம்.

⇒ தமிழ்நாட்டு மூவேந்தரும் நால்வகை படைகளில் சிறந்து விளங்கினார்கள்.

⇒ இருப்பினும், சேர, சோழ மன்னர்கள் கப்பற் படையில் வலிமையானவர்களாக இருந்ததை ரா.பி. சேதுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

---

## 6. அருள் உணர்வு

**ஆசிரியர் குறிப்பு:-** -மு. வரதராசன்.

**பிறப்பு:** 25.04.1912

**ஊர்:** திருப்பத்தூர்

**பெற்றோர்:** முனுசாமி, கண்ணம்மாள்

இயற்பெயர் : திருவேங்கடம்

படைப்புகள் : கள்ளோ ? காவியமோ ?. செந்தாமரை, அந்தநாள், பெற்ற மனம், பாவை, மலர்விழி, அல்லி, கரித்துண்டு போன்ற 50க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

மறைவு : 10.10.1974

⇒ ஒரு கன்னத்தில் அறைந்தவனுடைய இரு கன்னங்களையும் திருப்பி அறைதல் உலகியல்.

⇒ பொறுத்து இருந்து அவனைத் திருத்த முயலுதல் அன்பியல் என்கிறார்.

⇒ பொறுத்திருக்க மனவலிமை வேண்டும். மனவலிமை இல்லாதவர் உடனே சினம்கொண்டு அதற்கு ஈடாக அறைந்து மகிழ்வர்.

⇒ தன்னை அறைந்தவனைத் திருத்த முயற்சி செய்தல் வேண்டும். அவ்வாறு நாம் செய்தால் அறைந்தவன் நாணம் கொண்டு திருந்துவான்.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்னும் வள்ளுவரின் வாக்கை நன்கு உணர்ந்தால் அன்பியல் தோன்றும் என்கிறார் மு.வ.

மன்னனைத் திருத்திய புலவர் :-

⇒ சோழன் நெடுமுடிக்கிள்ளியின் தம்பிய கிள்ளிவளவன் மலையமான் திருமுடிக்காரியுடன் பகைக்கொண்டவன். மலையமானும் கிள்ளிவளவனைப் போன்று புகழும் ஆண்மையும் படைத்தவன்.

⇒ கோவூர்கிழார், சோழ வேந்தனிடம் கூறிய வாசகம், "சோழ வேந்தனே! ஆணையை நிறைவேற்றும் முன் நான் சொல்வதைக் கேள்; நீயோ சிறு பறவையைக் காத்த சோழ மரபில் தோன்றியவன். நீ கொல்லச் சமைக்கும் குழந்தைகள் புலவர்களின் துன்பத்தைப் போக்கிய வள்ளலின் குழந்தைகள். அக்குழந்தைகள் ஒன்றும் அறியாத சிறு பிள்ளைகள்." இதை கேட்டு, சோழன் தன் தவறை உணர்ந்தான்.

⇒ சோழன் நலங்கிள்ளியிடம் நட்புக்கொண்டவர் இளந்தத்தனார் என்னும் புலவர். அவர் ஒரு முறை உறையூருக்குச் சென்றார். உறையூரில் நெடுங்கிள்ளி ஆண்டு வந்தான்.

⇒ அவன் நலங்கிள்ளியோடு பகைகொண்டவன்

⇒ பிறர்க்குத் தீதறியா வாழ்க்கை ஒன்று உண்டு என்றால் அது புலவர் வாழ்க்கை தாம்.

⇒ மன்னன் கவரி வீசியது புலவர் நண்பர் என்பதற்காக அல்ல. நல்ல தமிழ் கற்றவர் என்பதனால். அதனால் இருவருக்கும் அன்பு மலர்ந்தது.

⇒ தாய்மொழியான தமிழைக் கற்றவன் ஒருபோதும் தீங்கு நினைக்கமாட்டான்.

## 7. இறவாத கவிதை

அ.மு. பரமசிவானந்தம்

⇒ மனிதனைப் படைக்கும் பிரமனைவிட மேலானவர் கவிதையைப் படைக்கும் புலவன்.

## இறவாத கவிதை:

⇒ கவிஞன் தன்னை மறந்து நின்று உள்ளத்தில் உண்மை உடையவனாக, உலகை நினைத்து, மக்கள் வாழ்வொடு தானும் பிணைந்து, அவ்வாழ்வையே தன் கவிதைக்கு நிலைக்களனாகக்கொண்டு, உணர்வின் உச்சியிலே நின்று பாடுவானாயின் அவன் கவிதை என்றும் நிலைத்து வாழும் இறவாத சிறந்த கவிதையாய் விளங்கும்.

## உலகில் நிலைபெற்று வாழ்பவர்:

⇒ தோற்றம் உண்டு எனில் மறைவுண்டு என்ற பழமொழி மக்களிடம் பரவலாகப் பேசப்படுகின்றது. உயிர் உள்ள ஒன்று ஒருநாள் அழியும் தன்மை கொண்டது.

⇒ காலம் கடந்து மிகச் சிறந்து நிற்பவை புலவர் படைக்கும் இலக்கியங்கள் ஆகும்.

## படைப்பாளன் மேன்மையானவன்:

⇒ புலவரின் பொய்யா இலக்கியங்களையும் மனிதப் படைப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும் மனிதப் படைக்கும் புலவர் ஒருவர் மனிதனைப் படைக்கும் பிரமனினும் கவிதையைப் படைக்கும் புலவன் மேலானவனாகிறான்.

## திருக்குறள்:

⇒ இறவாத கவிதையையும் அதைப் பாடும் புலவனையும் அதனால் உலகம் பெறும் பயனையும் எண்ணிப் பார்க்கின்றார் பாரதிமார். நல்ல கவிதை ஒருவனை எவ்வாறு மாற்றும் என்பதனை,

"பள்ளத்தில் வீழ்ந்திருந்த குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கு அமரர் சிறப்புக் கண்டார்".

என்று கூறுகிறார்.

நிலையான கவிதைகள்:

⇒ வள்ளுவரின் வழியைப் பின்பற்றி

பாரதியார்;

" இனி ஒரு விதிசெய்வோம் - அதை
எந்நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
சகத்தினை அழித்திடுவோம்"

என்ற இறவாத கவிதையைப் படைக்கின்றார்.

⇒ பாரதியார் சாகாவரம் அருள்வாய் என்ற இறைவனை நோக்கி பாடும் பாட்டிலே அவர்தம் சாகாத கவிதை சிறப்பாக வாழ்கின்றது.

"வானில் பறக்கும் புள்ளெலாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்
கானில் வளரும் மரமெலாம் நான்
காற்றும் புனலும் கடலுமே நான்"

உழைப்பின் சிறப்பு:

"வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் - இங்கு
வாழும் மனிதர்எல்லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் - பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டா"

என்னும் குறளில் உழைப்பின் மகத்துவத்தை உணர்த்துகிறார்.

⇒ ஒரு சிறந்த கவிஞனே இறவாத கவிதையைப் படைக்க முடியும், வள்ளுவரும், பாரதியாரும் சிறந்த படைப்பாளர்களாவர். அவர்கள் தற்போது உயிருடன் இல்லையென்றாலும், அவர்களின் இறவாத படைப்புகள் மக்களை நல்வழிப்படுத்துகின்றன என்பதை அறிய முடிகிறது.

---

## 8. திருக்குறட் சிறப்பும் பொருள் இயைபும்

- வை.ப.கரு.இராமநாதன் செட்டியார்

⇒ திருக்குறளின் பெருமையை உணர்த்தும் நூல் திருவள்ளுவமாலை.

⇒ திருக்குறளுக்கு முற்காலத்தில் உரை எழுதியோர் பதின்மர் (10 பேர்) ஆகும்.

**திருக்குறளின் சிறப்பு:**

⇒ தமிழ்மொழியில் தலைசிறந்த நூல் திருக்குறள் ஆகும். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று அதிகாரங்களையும், நூற்றி முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களையும் கொண்டது.

⇒ திருக்குறள் பாக்களின் சொற்களையும், பொருள்களையும் எடுத்துக் கையாளாத நூல்கள் பின்னர் இயற்றப்படவில்லை எனலாம்.

⇒ சொல்லையும், பொருளையும், எளிதில் மாற்றவிட முடியாத நிலையில் திட்பமும், நுட்பமும் உடையனவாக திருக்குறட்பாக்கள் அமைந்து சிறந்து விளங்குகின்றது.

⇒ தமிழ்மொழியில் உள்ள தலைசிறந்த இலக்கியமாகத் திகழ்வது திருக்குறள் ஆகும்.

⇒ திருக்குறளை பொருள் இயைபின் காரணமாக இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

* ஒரு குறட்பாவின் பொருளுடன் மற்றொரு குறட்பாவின் பொருளினை இயைத்துப் பார்க்கும்போது பொருள்நலம் சிறத்தல்.

* பொருள் இயைபாது முரண்படுவன போல் தோன்றும் குறட்பாக்களின் பொருட்கள் இயைதல் என்பன ஆகும்.

<u>அறத்துப்பாலில் பொருள் சிறத்தல்</u>:

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்"

⇒ இக் குறட்பாவினை மேம்போக்காக பார்க்கும்போது பொறுத்தார்க்கு அவர் இறக்கும் அளவு புகழ் உண்டு என்னும் பொருள் தோன்றும்.

<u>பொருட்பாலில் பொருள் சிறத்தல்</u>:

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு".

⇒ இவற்றுள் அறிவு உடையார் நட்பு பிறை வளர்வதுபோல, நாள்தோறும் வளர்ந்து பயனளிக்கும் தன்மையுடையது. அறிவில்லாதோர் நட்பானது

முழுமதி தேய்வதைப்போல நாள்தோறும் குறையும் தன்மையுடையது என்பதாகும்.

காமத்துப்பால் பொருள் சிறத்தல் :

“பிறைக்கால் சுருங்கா, வரின்நந்தா, அவிழ்சுடர்
ஆறநர் உற்றன கண்”

இக்குறட்பா இதனைவகை பாவினால் கண்புனம் தலைவியின் நிலையைக் கூறுவனவாகும்.

## 9. மொழிப்பற்று

— க. ப. அறவாணன்

⇒ மொழிப்பற்று தமிழருக்கு வேண்டும் என்று கூறுபவர் க. ப. அறவாணன்.

⇒ சங்ககாலத்திலேயே தமிழ்நாட்டில் பரவத் தொடங்கிய சமயம் மொழி வைதிக சமயமும், சமஸ்கிருதமும்.

⇒ கம்பராமாயணம் அரங்கேறாமல் தடுத்தவன் குலோத்துங்க மன்னன்.

⇒ எது ஒருவனிடம் இல்லையோ அதைப்பற்றித்தான் அவனுக்கு அறிவுறுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. அவ்வகையில் தமிழர்களுக்கு மொழிப்பற்றை உணர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது ஏற்பட்டுள்ளது.

மொழிப்பற்று :

⇒ தமிழருக்குக் கேடு சங்க காலத்திலேயே தொடங்கிற்று. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் ஆரியமொழி வட இந்தியாவிலிருந்து தென்னகத்தில் புகுந்து அறிமுகமாயிற்று.

மொழி, சமயப்போர்கள்:

=> சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் வைதீக சமயமும் சமஸ்கிருதமும் பரவின. இவற்றை எதிர்த்து சைனமும், பௌத்தமும் வடஇந்தியாவில் தோன்றின.

=> தமிழ்நாட்டிலும் பரவின. சைனரால் அர்த்தமாகதி வளர்ச்சி பெற்றது.

மொழிப்பற்று நூல்கள்:

=> தமிழ் பிறந்து வளர்ந்து நிலை பெற்ற தமிழ்நாட்டிலே தமிழ் ஒதுக்கப்பட்டது. தமிழுக்குரிய முதன்மை தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டது.

=> ஆரியம், தெலுங்கு, மராத்தி, அரபி போன்ற மொழிகளின் ஆதிக்கத்திலிருந்து தமிழ்த்தாய் விடுபட முனைந்த போது ஆங்கிலம் தமிழ்த்தாயை அடிமை கொண்டது.

---

## 10. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகள்

-முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்

=> ரா.பி. சேதுப்பிள்ளை பதிப்பித்த கவிதைத் தொகுப்புகள் செஞ்சொற்கவிக்கோவை, தமிழ்க் கவிதைக் களஞ்சியம்.

=> தமிழ்க்கவிதை சங்க காலத்தில் தனிப்பா என்னும் வகைமை சார்ந்திருந்ததையும் காலம் செல்லச் செல்ல இவ்வகைமை அழிந்தும் மறைந்தும் வாடி நலிவுற்றதையும் குறிப்பிடுகிறார்.

=> பாரதியாரின் உரைநடை நூல்கள் காட்சி, சக்தி, காற்று.

புதுக்கவிதைகளில் வெளிப்படும் உத்திகள் :-

=> படிமப் பயன்பாடு

=> முரண்

=> பொருந்தாவற்றைப் பொருத்தும் கலைநெறி

=> பழமரபுக்கதை

=> வர்ணனை

=> இருண்மை / புதிர்க்கோலம்.

=> நாட்டுப்புறக் கவிதை/கதை/கலை

=> அங்கதம்

=> குறியீடு

=> சிதைவுப் பாங்கு

=> அதிர்வூட்டல்

=> சிறுகதைப் பாணி.

=> விடுகதை

=> ஹைக்கூ உத்தி

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகள்.

=> கால இடைவெளிக்களன்

=> பொருள் நிலைக்களன்

=> கட்டமைப்பு நிலைக்களன்

=> பயன் நிலைக்களன்

பாரதியாரில் இருந்து தொடக்கம் :

=> புலவர்கள் எப்போதும் தொல்காப்பியத்தில் இருந்து தொடங்குவது போல நவீன இலக்கியவாதிகள் பாரதியாரில் இருந்து தொடங்குவார்கள்.

⇒ பாருளபொருள், உள்ளடக்கம் என அறியப்படும் கவிதையின் கருத்துக்களில் இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள் ஆழமான பரிமாணங்களை அமைத்துள்ளன. இந்தப் புத்துணர்வின் வெளிப்பாடாக பாரதியார்

"சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது, சொல்புதிது"

எனப் புதுக்கவிதையை அறிமுகம் செய்கின்றார்.

⇒ தமிழ் இலக்கியப் படைப்புகளில் இலக்கிய வகைகள் படிப்படியாக மாற்றம் அடைந்திருப்பதை சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# அலகு-4: சிறுகதை

## 1. ஒரைப்புல் - சி. ஆர். ரவீந்திரன்

முக்கிய கதைமாந்தர்கள்:

1. மாரத்தாள் - ரங்கியண்ணனின் மனைவி
2. ரங்கியண்ணன் - ராயப்பக் கவுண்டரின் மூத்த மகன்
3. ரங்கண்ணன் - ராயப்பக் கவுண்டரின் இரண்டாவது மகன்
4. பூவாத்தாள் - ராயப்பக் கவுண்டரின் மகள்
5. செல்லம்மாள் - ரங்கண்ணனின் மனைவி
6. அவனாசியப்பன் - பூவாத்தாளின் கணவன்
7. சின்னையாக் கவுண்டர் - வள்ளியம்மாளின் கணவர்
8. பெரியண்ண கவுண்டர் - சின்னையாக் கவுண்டரின் அண்ணன்
9. திருமலை - பழனாளின் கணவன், பாதாரி (பண்ணை வேலை செய்பவர்)

கதைச் சுருக்கம்:

★ மாரத்தாள் ராக்கியண்ணனின் மனைவி. தன் வீட்டுப் பண்ணை வேலைகளைச் சளைக்காமல் செய்பவள். அச்சில் வார்த்தைப் போன்ற மாரத்தாள் கறுப்பான உடம்புடன், நீக்கும் பிழியுமாக கண்ணைக்குப் பிடித்தவளாய் இருப்பாள். வேலைக்குப் பழக்கப்பட்ட உடம்பு. மற்றவர்களைவிட முந்திச் செல்பவள். களை எடுத்தாலும், காய் பறித்தாலும், பயிர் அறுத்தாலும் அவள் நான் எட்டு முன்னால் செல்பவள். தன் தங்கை செல்லம்மாளிடம் எப்படி வேலை வாங்க வேண்டும் என்பதைத் தெரிந்து வைத்து இருப்பவள்.

★ ஆடைப்புல் நாவல் மாங்கரை, மசக்கரை, போடிபாளையம், பிச்சனூர் சாவடி, பாலத்துறை, வெள்ளமடை போன்ற ஊர்களையும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கதைக்களமாக அமைத்து மாங்கரை கவுண்டமார்களையும் வளளவி மாதரிகளையும் முக்கிய கதைமாந்தர்களாகக் கொண்டு அமைந்துள்ளது. அந்நாவல் குறிப்பிடும் செய்திகளை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

## 1. சுமை பேதம்

-ஜெயகாந்தன்.

ஆசிரியர் குறிப்பு:

தோற்றம்: 24.04.1934.

2002 - ஆம் ஆண்டு ஞானபீட விருதுபெற்றவர்.

## ஜெயகாந்தனின் நாவல்கள் :

1. வாழ்க்கை அழைக்கிறது
2. உன்னைப்போல் ஒருவன்
3. பாரிசுக்குப் போ
4. சில நேரங்களில் சில மனிதர்கள்
5. யாருக்காக அழுதான்.

மறைவு : 08.11.2015

## கதைமாந்தர்கள் :

1. மருதையன் – ரிக்ஷாக்காரன்.
2. பூங்காவனம் – மருதையனின் மனைவி.
3. செல்லப்பன் – பூங்காவனத்தின் தம்பி.

## கதைச் சுருக்கம் :

* சமை பேதம் என்னும் சிறுகதையில் சமுதாயத்தில் மனிதரிடையே வேற்றுமைகளும் அடக்கு முறைகளும் ஊடுருவிக் காணப்படுகின்றன என்பதை எளிமையான கதைமாந்தர்களைக் கொண்டு ஜெயகாந்தன் விளக்கியுள்ளார்.

---

## 2. கண்ணன் பிறந்தான்

– ஜெயகாந்தன்.

## கதைமாந்தர்கள் :

1. சடகோபன் – ஆறாம் வகுப்பு, ஜில்லா போர்ட் பாடசாலை.
2. அனந்தசயனம் – ஜில்லாபோர்ட், ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்.
3. அண்ணாசாமி – பாகவதர்
4. கண்ணன் – அண்ணாசாமியின் மகன்.
5. அன்பாள் – கண்ணகியின் அக்கா

6. அலமேலு – அண்ணாசாமியின் மனைவி.

7. ராமாமிர்த ஐயங்கார் – ஜில்லா கல்வி அதிகாரி.

8. சீமாச்சு – ஆண்டாளின் கணவன்.

கதைச் சுருக்கம்:

☆ இறைவனை வணங்கினால் நம் துன்பங்கள் நீங்கும் என்பது மனிதரிடையே உள்ள நம்பிக்கை. ஆனால் இக்கதையில் வரும் அண்ணாசாமியின் குடும்பம் முழுவதும் அனைத்து நாட்களும் இறைவனை வணங்கியும் அவர்களுடைய வறுமைத்துன்பம் நீங்கவில்லை. இறைவனை வழிபட்டால் துன்பம் நீங்கும் என்னும் கூற்று பொய்த்ததை இக்கதை விளக்கிறது.

## ௫. பால் பேதம்

– ஜெயகாந்தன்.

கதை மாந்தர்:

1. வேலம்மாள் – ஆண்டிக்கோனாரின் மனைவி.
2. லட்சுமி – பசுமாடு.

கதைச் சுருக்கம்:

☆ பசு மாட்டினை வைத்து பிழைப்பு நடத்துகிறவர்கள் பாலுக்காக கன்றுக்குட்டிக்கு பால்கொடுக்காமல் இறக்கச் செய்வதையும், பயன் உள்ளவரை பசுமாட்டைப் பேணிக் காப்பதும் பயன் இல்லாதபோது அதனை இறைச்சிக்காக விற்று விடுவதனையும் இச்சிறுகதை விவரிக்கிறது.

# 4. பூ வாங்கலியா பூ'

-ஜெயகாந்தன்

**கதை மாந்தர்கள்:**

★ராசாக்கண்ணு, பூவாயி

**கதைச் சுருக்கம்:**

★ராசாக்கண்ணு என்பவன் தன் விவரம் தெரிந்த நாள் முதலாய் சர்வேஸ்வரனை வழிபட்டு மகிழ்ச்சியாக வாழ்கிறான். சிவனின் திருவிளையாட்டால் மனைவியை இழக்கிறான். பின் தனக்கு வாடிக்கையாய் பூ கொடுக்கும் பூவாயியைத் திருமணம் செய்ய முடிவு செய்கிறான். அவள் மறுத்து விடுகிறாள். இந்தச் சமுதாயத்தில் கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்காததையும், மனைவியை இழந்த ஆணின் மன வேதனைகளையும் பற்றி விளக்குகிறது.

---

# 5. வேலை கொடுத்தவன்

-ஜெயகாந்தன்.

**கதை மாந்தர்கள்:**

1. கூலிமான் கந்தன்,
2. ராசாத்தி,
3. கருப்பையா

**கதைச் சுருக்கம்:**

ஒரு ஜட்கக்கூலிமானின் இரக்க உணர்வைக் கொண்ட கதையாக 'வேலை கொடுத்தான்' என்னும் சிறுகதை அமைந்துள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும்

இக்கதையில் வரும் கந்தன் போன்ற அன்புணர்வு இருந்தால் பிச்சை என்னும் தொழில் இல்லாமலேயே போய்விடும் என்பதைப் புலப்படுத்தும் விதமாக இக்கதை அமைந்துள்ளது.

## 6. ராஜா வந்திருக்கிறார்

-ஜெயகாந்தன்

கதைமாந்தர்கள் :

1. கன்னியம்மை, 2. தங்கராசு, 3. மளிகைக்கடை சாய்பு

கதைச் சுருக்கம் :

* சாயபுவின் மளிகைக்கடையின் அருகில் தனது கணவனான தங்கராசுக்காக கன்னியம்மை 45 ஆண்டுகளாக காத்திருக்கிறாள். இதுவே இக்கதையின் சுருக்கம். (கனவுக்கன்னியாக கனவுகாக காத்திருந்தாள்).

## 7. எது, எப்போது

-ஜெயகாந்தன்.

கதை மாந்தர் :

மவுண்ட்ரோட் மைக்கேல்.

கதைச் சுருக்கம் :

* நம்முடைய தேசத்தில் உணவு இல்லாமல் எத்தனையோ மக்கள் கஷ்டப்படுகிறார்கள் அவர்களுக்கு உண்ண உணவு உடுத்த உடை

கொடுக்க வேண்டும். அதைவிடுத்த மதக் கொள்கைகள், இறைத் தத்துவம் போன்றவற்றைப் போதிப்பதால் ஒரு பயனும் இல்லை என்பதை விளக்கும் கதையாய் அமைந்துள்ளது இச்சிறுகதை.

## 8. பொறுக்கி

- ஜெயகாந்தன்.

**கதை மாந்தர்கள்:**

1. சபாபதி
2. முனியம்மாள் - சபாபதியின் தாய்.
3. பசீமான் சுந்தரம் - நகரசபை அங்கத்தினர்.

**கதைச்சுருக்கம்:**

★ சபாபதி என்கிற ஒரு பொறுக்கி தனது அம்மாவான முனியம்மாள் கடையில் அநியாயமாக கடையில் உள்ள பலகாரங்களை வீணாக தின்று தின்று தீர்த்துக்கொண்டிருந்தான். ஒரு போஸ்டருக்காக பன்றிச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடியைத் தாங்கிப் பிரச்சாரம் செய்த வீணாக பசீமான் சுந்தரத்தை நம்பி தொலைக்கிறான் இந்த எச்சில் பொறுக்கி சபாபதி.

## 9. தனி மனிதன்

- ஜெயகாந்தன்.

* இக்கதை மனிதகுலத்தில் தற்பொழுது நடக்கும் யுகம் இரண்டாவது யுகம் என்கிறார் ஜெயகாந்தன்.

**கதைச் சுருக்கம் :**

* மனித இனத்தின் தோற்றுவாயாக இருந்த பழைய காலக்கட்டங்களில் இருந்து மாறி இன்று இரண்டாவது யுகமாக மாறி இன்றைய தனிமனிதன் வாழ்வில் பல மாற்றங்கள் நிகழ்ந்து ஆண் வர்க்கம் பெண்ணை ஏமாற்றிவிட்டு தன்னை நம்பி வந்த பெண்ணை பாதியில் கைவிட்டுச் செல்லும் கொடுமையான செயல்களைக் குறிப்பிடும் கதையாய் அமைந்து உள்ளது.

---

## 10. பட்டணம் சிரிக்கிறது

- ஜெயகாந்தன்.

* பட்டணம் சிரிக்கிறது சிறுகதை உணர்த்தும் செய்தியை இக்கதை விளக்குகிறது.

**கதைச் சுருக்கம் :**

* ஒரு கிராமத்தான் குடும்பத்துடன் பட்டணம் சென்று அங்கு இருக்கும் கட்டடங்களையும், மக்களையும் பார்ப்பதையும், பட்டணத்து மக்கள் எவ்வளவு உடல் வலிமை அற்றவர்களாக, நாகரிகம் என்ற பெயரில் ஆண் பெண் வித்தியாசம் தெரியாமல் உடை அணிந்து கொள்கிறார்கள் என்பதையும் இக்கதை விளக்குகிறது.

# அலகு - 5

## நாடகம்

### 1. கனகை

- டாக்டர் கா. அரங்கசாமி

**கதை மாந்தர்கள் (முக்கிய):**

1. இராவணன் - இலங்கை மன்னன்.
2. கும்பகர்ணன், வீடணன் - இராவணனின் தம்பியர்
3. கனகை - கும்பகர்ணனின் மனைவி
4. வாணை - கனகையின் தோழியர்.
5. இராமன் - அயோத்தி மன்னர்.
6. சீதை - இராமனின் மனைவி.
7. அனுமன் - வானரப் படைத்தலைவர்.

**கதைச் சுருக்கம்:**

★ கும்பகர்ணன் வீழ்ச்சியுற்றபின் இராவணன் தன் மகன்களான அதிகாயனையும், இந்திரசித்தனையும் அனுப்ப, அவர்களும் வீரப்போரில் மாண்டனர். பின் தன் மூலப்படைகளை அனுப்பி அதனையும் இழந்தான். இறுதியில் தானே சென்று போரில் இறக்கிறான். அவனுடைய மனைவி மண்டோதரியும் இறக்கிறாள். சீதை விடுவிக்கப்படுகிறாள். இராமபிரான் வீடணனுக்கு முடி சூட்டி இலங்கைக்கு வேந்தனாக்குகிறார். தன் மனைவியுடனும் தம்பியுடனும் அயோத்திக்குச் சென்று ஆட்சி செய்கிறார் இராமன். இதுவே இக்கதையின் விளக்கம்.